1978 மார்ச் 7]

(ஆ) பிரிவினை செய்யப்பட்ட இரு ஊராட்சிகளும், நடைபெறவிருக்கும் ஊராட்சிகளின் சாதாரணத் தேர்தல் நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, வருகிற ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, வாய்ப்பு அளிக்கப்படும்.

*430 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள வெள்ளியக்குடி பஞ்சாயத்தை வெள்ளியக்குடி, வடபாக்கம் என இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) பஞ்சாயத்துக்களைப் பிரிக்கும் அதிகாரம் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு வழங்கப் பட்டிருக்கிறது. அதன்படி வெள்ளியக்குடி ஊராட்சியை வெள்ளியக்குடி, வடபாக்கம் என இரண்டு பஞ்சாயத்துக்களாகப் பிரித்து 25—10—1977 இல் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார்.

(ஆ) இவ்விரு ஊராட்சிகளும் சாதாரண பஞ்சாயத்து தேர்தல் நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

மூவாநல்லூர் குடிநீர் திட்டம்

*431 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மன்னார்குடி தாலுக்கா மூவாநல்லூரில் குடிதண்ணீர் திட்டம் அமுலாக்கப்பட்டு விட்டதா ?

(ஆ) வீதிகளுக்கு குழாய் இணைப்புக் கொடுப்பதில் சிக்கல் ஏதும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) வினா எழ இடமில்லை.

(முற்பகல் 9-40)

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் வந்து 30 வருஷத்திற்குப் பிறகு குடி நீர் வழங்குவதற்கான திட்டங்களை நாம் தீட்டியிருக்கிறோம். இந்தக் குடி நீர் திட்டத்தை மூவாநல்லூர் கிராமத்திற்கு விரைவிலே நிறைவேற்றி, குடி நீர் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மூவாநல்லூரில், ஊராட்சி ஒன்றியத்தால் அமைக்கப்பட்ட 6 கை அழுத்த குழாய்களும் (Hand Pumps) 4 திறந்த வெளி கிணறுகளும் உள்ளன. அதோடு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் உள்ளது. அதிலுள்ள நீர் இரு பொதுக் குழாய்கள் மூலமாக ஊருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. அதோடு, அரிசன மக்கள் வாழும் இடத்திலே ஒரு கையழுத்தக் குழாய் 1976-77 இல் பொருத்தப்பட்டு, நன்றாக இயங்கி வருகிறது. மேலும், ஒரு தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டியினை அரிசன காலனியில் அமைக்கும் பணி, அரிசன நலத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி, இறைவை நிலையம் முதலியவை அமைக்கப்பட்டும் விட்டன. இறைவை இயந்திரம் பொருத்தி மின் இணைப்பு பெறும் பணி எஞ்சியுள்ளது. அது முடிவு பெற்றவுடன் குடிநீர் நிரம்பக் கிடைக்கும்.

E.S.I. Hospital for Dharmapuri district.

* 432 Q.—Dr. K. SAMARASAM: Will the Hon. the Minister for Labour be pleased to state whether there is any proposal with the Government to open an E.S.I. Hospital in Dharmapuri district?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இல்லை.